பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
22 08 2026 SATURDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- கலாச்சாரம் என்பது மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் ஒரு வலிமையான கருவி என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
- பிரிக்ஸ் நாடுகளின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்கள் மாநாடு ஆந்திரப்பிரதேச மாநிலம் விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெறுகிறது.
- அஸ்ஸாம் மாநிலம் அறிவித்துள்ள ஹைட்ரோ கார்பன் குறித்த புதிய கொள்கை, வடகிழக்கு பகுதியின் விரைவான வளர்ச்சிக்கு உதவும் என்று மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.
- அமெரிக்காவுடன் ஈரான் ஒப்பந்தம் செய்துகொள்ள தயாராக உள்ளபோதிலும், அந்த ஒப்பந்தம் தாங்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு இல்லை என்று அமெரிக்கா கூறியுள்ளது.
- டைமன் லீக் தடகள போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா, இரண்டாவது இடத்தை பிடித்துள்ளார்.

>>>>>><<<<<<

கலாச்சாரம் என்பது மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் ஒரு வலிமையான கருவி என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், இந்தியாவின் பாரம்பரியத்தோடு, கலாச்சாரம் பின்னிப் பிணைந்துள்ளது என்று கூறினார்.

இன்றைய தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்கள், தங்களுக்குள்ள பொறுப்புணர்வை நிறைவேற்றுவதோடு, எந்த பிரச்சினையையும் பொறுமையுடன் அணுக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நாட்டின் பல்வேறுபட்ட கலாச்சாரங்களை இளைஞர்கள் அறிந்து கொள்ளச் செய்வதற்கான ஏற்பாடுகள் அவசியமானவை என்றும், அது தேசத்தின் மீதான பற்றுதலை அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் பழங்கால இசையானது, தனது அடிப்படைத்தன்மையை மாற்றிக் கொள்ளாமல், வளர்ச்சிபெற்று வருவதால், பல நூற்றாண்டுகளாக நிலைத்து நிற்கிறது என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இந்தியா - பிரிட்டன் இடையே ராணுவ ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்தியா – பிரிட்டன் பாதுகாப்பு ஆலோசனை குழு கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவின் பாதுகாப்புதுறை செயலர் திரு. ராஜேஷ்குமார் சிங், பிரிட்டன் பாதுகாப்புத்துறை துணைச் செயலர் திரு. Jeremy Pocklington ஆகியோர் தலைமையிலான குழுவின் கூட்டத்தில், கூட்டுப் பயிற்சி, திறன் மேம்பாடு மூலம், பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டது.

இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பு சூழல் வலுவாக உள்ளதாக இருதரப்பினரும் ஒப்புக் கொண்டனர்.

பாதுகாப்பு துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கவும் இந்தக் கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

>>>>>><<<<<<

பிரிக்ஸ் நாடுகளின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்கள் மாநாடு ஆந்திரப்பிரதேச மாநிலம் விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெறுகிறது.

மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், பிரிக்ஸ் அமைப்பில் உள்ள 11 உறுப்பு நாடுகளின் விளையாட்டு அமைச்சர்களும், தூதுக்குழுத் தலைவர்களும் பங்கேற்று விளையாட்டில் பரஸ்பர ஒத்துழைப்பை பலப்படுத்துவது குறித்து விவாதிக்கவுள்ளனர்.

இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல். அவர்களின் மேம்பாட்டுக்கான திட்டங்களை மேலும் வலுப்படுத்துதல் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளதாக மத்திய விளையாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

அஸ்ஸாம் மாநிலம் அறிவித்துள்ள ஹைட்ரோ கார்பன் ஆய்வு மற்றும் உற்பத்தி தொடர்பான புதிய கொள்கை, வடகிழக்கு பகுதியை விரைவான வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்ல உதவும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் கருத்து தெரிவித்துள்ள அவர், மத்திய அரசின் சுயசார்பு இந்தியா என்ற இலக்கை எட்டுவதிலும் இது முக்கியமான மைல் கல் என்று கூறினார்.

அஸ்ஸாம் மாநில அரசின் அறிவிப்பு, எரிசக்தி துறையில் முதலீடுகளை ஈர்ப்பதுடன், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு தொடர்பான ஆய்வு மற்றும் உற்பத்தியை துரிதப்படுத்த உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு எரிசக்தி உற்பத்தி அதிகரிக்கும் போது, இளைஞர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றும் திரு. ஹர்தீப் சிங் புரி கூறினார்.

>>>>>><<<<<<

பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத்துறை சார்பில் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான மூன்று கட்ட தேர்வு மூலம், தேசிய ஆசிரியர் விருதுகளுக்கான ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் அடுத்த மாதம் 5ஆம் தேதி, ஆசிரியர் தினத்தன்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, 48 ஆசிரியர்களுக்கு தேசிய ஆசிரியர் விருதுகளை வழங்கவுள்ளார்.

தகுதிவாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து இணையவழியில் சுயபரிந்துரைகள் பெறப்பட்டதாகவும் கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

உச்சநீதிமன்றத்தில் நீண்டகாலமாக தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக 3 நாட்கள் சிறப்பு லோக் அதாலத் நேற்று உச்சநீதிமன்றத்தில் தொடங்கியது.

இதற்காக ஏற்படுத்தப்பட்ட 16 லோக் அதாலத் அமர்வுகள் முன்பு, 600க்கு மேற்பட்ட வழக்குகள் பட்டியலிடப்பட்டு, முதல் நாளில் 400-க்கு மேற்பட்ட வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது.

இந்த சிறப்பு லோக் அதாலத் நாளை வரை நடைபெறும் என்று உச்சநிதிமன்றம் அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

பங்களாதேஷ் நாட்டின் 23 வது அதிபராக திரு. Mirza Farkhrul Islam Alamgir பதவியேற்றார்.

டாக்காவில் நேற்று நடைபெற்ற பதவியேற்பு விழாவில் அவருக்கு அந்நாட்டின் நாடாளுமன்ற துணை சபாநாயகர் திரு. Kaiser Kamal பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

சமீபத்தில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் பங்களாதேஷ் தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட்ட திரு. *Alamgir*, எதிர்க்கட்சிகள் சார்பில் போட்டியிட்ட ஜமாத் இ இஸ்லாமிக் கட்சியின் வேட்பாளர் திரு. *Oli Ahamed*-ஐ தோற்கடித்தார்.

>>>>>><<<<<<

அமெரிக்காவுடன் ஈரான் ஒப்பந்தம் செய்துகொள்ள தயாராக உள்ளபோதிலும், அந்த ஒப்பந்தம் தாங்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு இல்லை என்று அமெரிக்கா கூறியுள்ளது.

வாஷிங்டனில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப், இருநாடுகளுக்கு இடையே பதற்றம் நீடித்தாலும், அமைதி ஒப்பந்தத்தை எட்ட அமெரிக்கா தயாராக உள்ளது என்று கூறினார்.

ஆனால் இதற்கு ஈரான் இன்னும் முழுமையாக தயாராகவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

*Hormuz* நீரிணை உள்ளிட்ட முக்கியமான பகுதிகள் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், ஈரானுக்கு எதிரான பொருளாதார தடைகள் மேலும் கடுமையாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், அமெரிக்க அதிபரின் இந்த கருத்துக்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

டெஹ்ரானில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. *Abbas Araghchi*, ஈரான் மீது அமெரிக்கா கடுமையான பொருளாதார தடைகளை விதிக்க திட்டமிட்டுள்ளதாக குற்றம் சாட்டினார்.

கடந்த காலங்களிலும் இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்து அமெரிக்கா தோல்வியடைந்ததாகவும், புதிய தடைகளும் நிச்சயம் தோல்வியடையும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவின் உள்நாட்டு பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்ப இதுபோன்ற அறிவிப்புகளை அதிபர் திரு. ட்ரம்ப் வெளியிடுவதாகவும் ஈரான் வெளியுறவு அமைச்சர் குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<

காஸாவில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் சர்வதேச நிறுவனங்களை இஸ்ரேல் தடுத்து வருவதால், அந்நாட்டின் பிரதமர் திரு. பெஞ்சமின் நேத்தன்யாஹூவுக்கு எதிராக இன்டர்போல் கைது வாரண்ட் பிறப்பிக்க வேண்டும் என்று துருக்கி கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நேத்தன்யாஹூ, துருக்கி அதிபர் திரு. தாயிப் எர்டோகன் ஒரு சர்வாதிகாரியைப் போல் நடந்து கொள்வதாக குற்றம் சாட்டினார்.

சிரியாவிற்குள் ராணுவ நடவடிக்கை அல்லது தனது செல்வாக்கை விரிவுபடுத்த துருக்கி முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஹமாஸ் அமைப்பினருக்கு துருக்கி அடைக்கலம் கொடுப்பதாகவும், சைப்ரஸின் பாதி பகுதியை துருக்கி ஆக்கிரமித்துள்ளதாகவும் திரு. பெஞ்சமின் நேத்தன்யாஹூ தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

அமெரிக்காவின் அலஸ்கா மாகாணத்தில் நிகழ்ந்த விமான விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

அடர்ந்த பனிமூட்டம் காரணமாக இந்த விபத்து நிகழ்ந்ததாகவும், இரண்டு முறை தரையிறங்க முயன்றபோதும் பலனளிக்காமல் விமானம் விபத்துக்குள்ளானதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

கேரளத்தில் ஓணம் பண்டிக்கைக்கான பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, நேரு கோப்பைக்கான படகு போட்டி இன்று ஆலப்புழாவில் நடைபெறவுள்ளது.

கடந்த 72 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இப்போட்டியில் பாரம்பரிய நீண்ட படகுகள் பங்கேற்கின்றன.

இந்த போட்டியை பொதுமக்கள் காணும் வகையில் ஆலப்புழா மாவட்டத்தில் அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற டைமன் லீக் தடகள போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா, இரண்டாவது இடத்தை பிடித்துள்ளார்.

கடந்த ஆண்டு இதே போட்டியில், 88 புள்ளி ஒன்று ஆறு மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து சாதனை படைத்த சோப்ரா, இந்த ஆண்டு 88 மீட்டர் தூரமே எறிய முடிந்தது.

>>>>>><<<<<<

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில், இந்தியாவின் Treesa Jolly - Gayatri Gopichand இணை இன்று சீன இணையை எதிர்கொள்கிறது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதிக்கு இந்தியா முன்னேறியதன் மூலம், பதக்கத்தை உறுதி செய்துள்ளது.

>>>>>><<<<<<